பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# சலவாத்துப் பாட்டு

கப்பற்பாட்டு, ஊஞ்சற்பாட்டு, கும்மிப்பாட்டு,
தாலாட்டு, தோழிப்பெண் பாட்டு
அடங்கியிருக்கின்றன

குலசேகரப்பட்டணம்
சர்க்கரை சாகிபுத்தம்பி அவர்கள் குமாரர்

**அல்லாபிச்சைப் புலவர்**
அவர்களால்

இலக்கண விலக்கிய வழுவறத்திருத்தியபடி
பார்வையிட்ட பிரதிக்கிணங்க

OFFICE OF THE REGISTRAR
22 FEB 1947
MADRAS

Q7:417
N46

சென்னை - இட்டா,
**பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்**
சக்கரவர்த்தி பிரஸ்.

இதன் விலை] 1946. [அணா 3.

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

N46

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

இஃது காயற்பட்டணம்

உதுமா நயினர் லப்பைப் புலவரவர்கள் பாடிய

# சலவாத்துப் பாட்டு

114113

## கொச்சகக் கலிப்பா

இன்னல்லாகவென் றேகுறுஆனிமேல் ஏகனுயத்திறக்கிய தன்பயன், சொன்னன்யானு மலக்குகளி யாருமென்றாதர் மீதிற் சொல்லுஞ் சலவாத்தையே, பன்னியாரு மியம்புங்களொன்றிற் குப் பத்தி யானுரைப்பே னென்றதாலது, தன்னையோதின ஞளு முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லமே. 1

மன்னர்மூசா நபிக்கொருமானிடன் மாறுசெய்தவன் மாண் டக்காதிருந், தென்னவேயிறை யென்னடியானிடத்தேகி நீர்கவ னிட் டடக்கும்மவ, னுன்னியேநபி பேர்தவுருத்திற்கண் டோதி னுன் சலவாத்தென்றதாலது, தன்னை யோதினஞளு முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே.

நாதர்மூசா நபிதான் கியாமத்து நாளில் நாவினிற்முகம் வாரா மலே, யோதவேயிறையே வழியேனங்ஙனேதயாறப்பு ஒன்றுரையா யெனத், தூதராமிறசூல் சலவாத்தைநீர் சொலலுந்தாக முரு தெனச் சொன்னதாற், றுதனையு நீராளு முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே.

உங்கள் தீன்வழி யாயிருந்துங்கள்பே ரோதக்கேட்டுடனே சலவாத்தவன், புங்கமாயுரை யாதபகீலனைப்போல்பகில னிலை யெனத்தேவரீர், சங்கைநாவுகொண்டோதினதாலது தன்னையோத வுந்தங்தும் கபுறினிற், றங்குநாளென்னை யாளுமுகம்மது சல்லல் லாகு அலைகிவசல்லமே.

காட்டுமானபி யேயுமைத்தான்பிணை கானகத்தினில் வைதினி யான்வர, மாட்டேனுகினு மதும்மத்தானவர் வள்ளலே யுங்கள் பேர் வரக்காதினிற், கேட்டுமே சலவாத்துரையார் வழிகேட்டி லாவனென் றேதினதாலும்மைச், சாட்டினேனென்னை யாளுமுகம் மதுசல்லல்லாகு அலைகிவசல்லமே. 5

மெய்க்குருனை விரித்திறையேவின வேதவாய்மை விலக்குகண் ணுசுகை, சிக்கிராப்பகலாப் பெரும்பாவமோ செய்தனியானடியே னென்னசெய்குவேன், மக்கராஜ முகம்மதெனும்சல வாத்தை யோதும் வரிசையினுலென்றன், சக்கராத்தினி லாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே. 6

துஞ்சுநாளுங்கபுறி லடங்கியே சோருநாளுங் கியாமத்தமளி யாலஞ்சு நாளுமகுசறிலே அதாபான நாளுமடியா ரனைவரும்,

கெஞ்சு நாளுமிறைவனே காரென்று கேட்குநாள் முஸ்தகிமெனும் பாலத்திற், றஞ்சநீரென்னை யாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமே. 7

தம்பிரான்சது வானத்துச் சூரியன் தன்னையே சவளத்துயர் வாகவே, முன்புகாட்டி நிறுத்துமப்போதலை மூளைவெந்து மயங்கி அந்தோவென, வெம்பியேஅழுத நாளுமகுசறு வேலையாள்பவர் நீரன்றிவேறில்லைத், தம்பமாக வந்தாளு முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமே. 8

வாருலாவு மடமயிலாசியா மங்கையாது மறியமுமே மணக், கோருலாவி யுமக்கருள்செய்மணக் கோலமாமகு மூதினிலேறிப் பொன், னூருலாவி வருந்திக்காட்சியு முண்மையாதிதீ தாரையுங் காணவே, தாருநீரென்னை யாளுமுகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லமே. 9

அல்லெல்லாநடங் தேகடங் தேழுவா னம்பரத்துயர் வாகியப் பாலறு, சில்லல்லாமுன மத்தகிய்யாத்தையே யியம்பவாதி திரு வுளமானதாற், சொல்லெலாஞ்சலவாத்துஞ் • சலாமுமே சொன் னதா லதையானுமியம்பினேன், சல்லல்லாகுஅலா முகம்மது சல் லல்லாகு அலைஹிவசல்லமே. 10

சலவாத்துப் பாட்டு முற்றிற்று.

---

## முன்னோர்கள் பாடிய கப்பற் பாட்டு

இலா கலாயில்லல்லாகு இல்லல்லா
முகம்மதுர்றசூலுல்லாகி-சூலுல்லா

முத்தகிஞ வுதித்து வந்தோர் இல்லல்லா
மொழியர்கதாய்ப் படைக்க வந்தோர் இல்லல்லா
கத்தனருள் சிறக்க வந்தோர் இல்லல்லா
கனகவிளக் காகிவந்தோர் இல்லல்லா

புத்திமதி ஹக்கனருளுட் பிரிவதாகிய பொற்பதி கனத்தறுசு நற்புவியும் வாழ்க, எத்திசையு மெய்க்கவொரு பொற்பிரபையாகி ஏகாந்தமான நவரத்ந மயிலாகிச், சுத்தமுடன் நான்குமூலைக் கிணறுமாகித் துய்யகலி மாவதனி னுட்பொருளுமாகிக், குற்ற மணுகாதநபி கப்பல் கவிபாடக் கோமானே பெங்குநிறை சீமானீ காப்பு. லாயி

2 அலிமரம் ஏறுவாய் இல்லல்லா
அடுத்திடுதா லவங்கலுவாய் இல்லல்லா
மெலிவில்லாஹேறய் தலைமரமாய் இல்லல்லா
மிகுத்திடும்றேய் ரெங்கதுவாய் இல்லல்லா

மலிவான தாலினுற் காம்பருவைத்து வளர்கின்றலாமதாற் கமர்பந்துகட்டிக், குலவுநலமீமினுற் கபாலங்களிட்டுக் கோமான் றன்ஹேயினுற் சிங்கஞ்சமைத்து, வலியாதகாபென்ற அணியம் பரப்பி வல்லவன்ஹாவென்ற சுக்கானையேற்றிப் பெலமாக, இவ் வெழுத்தால்வங்கம் வைத்தார் பேசுங்கண்மூன்றதா லெவருமே காண. லாயி

3 நால்சிபத்துத் தரளமணி இல்லல்லா
நல்லபச்சை மலக்கூச்சு இல்லல்லா
வாசஜப ராத்ததனில் இல்லல்லா
வருஞ்சிவப்புப் பவளமது இல்லல்லா

ஆசையொரு மலக்கூத்து நற்கறுப்பதாகி அழகான லாகூத்து தங்கமுடன் நல்ல, ஒசையுட்டாமரைப் பூப்பலதுந்தூக்கி உண்மை யெனு ஞானகலை மேற்கட்டிகட்டிப், பேசுமொரு அவ்வலெனு நற் கொடியுமேற்றிப் பிசகாமல் ஜலஜலெனு மேளந்தொனிக்கக், காச கல நால்பேர்கள் பாத்திகாவோதிக் கடல்மீதிற் கப்பலை யிறக்கினு ரையா.

4 பாய்மரந்தான் பேயதனுல் இல்லல்லா
பகரும் தேய்தான் கிபுலாவாய் இல்லல்லா
ஆயுங்கவி யாமரந்தான் இல்லல்லா
அடுத்தநொரு தாலதனுல் இல்லல்லா

தோயாமலிதுகள் நன்றாகவே கட்டித் துய்யலாய் சன்னபின் னலாலாத்துமாக, நேயமுடன் காம்பருநாலெழுத்தைனுய் நிக ரரிய சவுந்திரப் பாய்மரத்தேயுடன் ஒயாத தூண்டா விளக்கெழுத் தைனுய் உண்மைசேர் வெற்றியா யொக்கத்துலங்க, நாயனரு ளீராறு பீரங்கி தீர்ந்து நலமாக நற்சரக்கேற்றினுரையா. லாயி

5 ஆனகலி மாவேற்றி இல்லல்லா
அளவுடன் ஈமானேற்றி இல்லல்லா
சீனத்துள்ள கப்பலிலே இல்லல்லா
சிறந்தமகு பூபேற்றி இல்லல்லா

தானமுடன் கிலாசுகள் தொண்ணூற்றியாறுந் தருமாங்கணக் கர்தா மிருபேருமாக, ஈனமில்லாச் சிறுங்கிருபேருமாக இயல்பான கப்பல் நகுதானேக்கினேடும், மானமுடனும் பாலினெரு பேரி னேடும் வளமான வங்கமதி லேறியேகின்று, ஆனதொரு ஆகுகீ யென்னுமே நல்ல அழகான மந்திரப்பாய் விரித்தோடினர். லாயி

6 காயல்நகர் கடல்கடந்து இல்லல்லா
கன்யகுமரி னிலத்திற்போய் இல்லல்லா
ஆயுமலை யாளஞ்சென்று இல்லல்லா
அடுத்தபொன்னுக் கையைக்கடந்து இல்லல்லா

மாயாதகண்ணூர் தலைச்சேரிகண்டு வங்காரமான ஐங்கண்ணூடிவைத்து, ஓயாத அட்சரக் கயறுபாயேற்றி ஓங்காரமான பகர் தன்னிலே யேறிச், சாயாதவண்ணமா போடுமப்போது சத்துருக் கள்ளரை யங்குளவர்கண்டு, நீயாரு சொல்லென கா கீ கூவென நேசமொழி கேட்டங்கனோடி னுரையா. லாயி

7 கள்ளக்கப்பல் தன்னைவென்று இல்லல்லா
கனத்தபகர் தனைக் கடந்து இல்லல்லா
தெள்ளியஜித் தாவிற்சென்று இல்லல்லா
சிறந்தலங்கர் விட்டிறங்கி இல்லல்லா

வள்ளல் மகுமூதுநபி மக்காவிற்சென்று வண்மையுடனே கருபாவை வலம்வந்து, விள்ளுமுறை ஆதநபி பாதங்கடந்துமேவு மதினு நகரமெய்ப்போடு சென்று, உள்ளகுமாதம் வெளியில்வாய் போற்றிநின்று ஒப்பான காபகபு சையிணியிற் சென்று, மெள்ள வருபள்ளிமகு மூதைக்கடந்து மேலவன் கலவரத்தி லானூர்களையா. லாயி

8 ஆனபொழுதே கணவன் இல்லல்லா
அரியசெய்கைதனைப் புகழ்ந்து இல்லல்லா
தீன்புகழும் நபியிறசூல் இல்லல்லா
செங்கமலப் பதம்புகழ்ந்த இல்லல்லா

தானுனைகனொளி முகியித்தீன்பாதம் தப்பாமலெப்போதும் நடப்பாய்புகழ்ந்து, கோனுனஆதி புறத்தைத் தெரிந்து குத்துாசுறாருநபி யானூர்கள்நல்ல, தீனுனபேர்களிதை நன்றாய்த் தெளிந்து செயமுள்ளவோர்பொருளை யென்றென்றுநாடி, மானமொடுமுற்றிடிற்பேறதிகமுண்டாம் வல்லவன்கிருபைமிக வளருமேஐயா. லாயி

கப்பற்பாட்டு முற்றிற்று.

---

## நாகூர் முகம்மதுப் புலவரவர்கள் பாடிய

# ஊஞ்சற்பாட்டு

தரு-இ-ம்-தோடி-ரூபகதாளம்

பல்லவி

ஆடவாங்கள் ஊஞ்சல் ஆடவாங்கள்
அன்னமே பொன்னூஞ்சல் ஆடவாங்கள்.

அநுபல்லவி

ஆடவாங்கள் கூறால்கீன்க ளோடிவாங்கள்
ஆலநபியுல்லாமேற் பாடவாங்கள். ஆட

சரணங்கள்

1 ஆதிபெரியோனருளாற் கால்கணாட்டி
யவனறுசொளிவாலே விட்டம்போட்டு
சிதமார்குறுசொளிவால் வடங்கள் பூட்டி
ஜன்னத்தினொளிவாலே பலகைபாவிக்
கீதமுடன் கூறுல்கீன்கள் கவரிவீசக்
கிருபையுடன் வானவராலாத்தியேந்த
ஆதமுதனபிமார்கள் வடந்தொட்டாட்ட
ஆலநபி மகுமூதா ராடுமூஞ்சல். ஆட

2 பச்சைமர கதந்தன்னாற் கால்கணாட்டிப்
பவளவயி டூரியத்தால் விட்டம் போட்டு
நட்சத்திரங்கள்போலே வடங்கள்பூட்டி
நல்லமணி முத்ததினாற் பலகைபாவிக்
கச்சணிந்த கூறுல்கீன்கள் கவரிவீசக்
ககனவர்கஸ் தூரியா லாத்தியேந்த
முச்சகம்பு கழ்நபிமார் வடந்தொட்டாட்ட
முகம்மதூர் றசூல்நபினா ராடுமூஞ்சல். ஆட

3 அதிகவொளிச் சூரியனாற் கால்கணாட்டி
யழகுநட் சத்திரத்தால் விட்டம்போட்டு
மதியொளிவு சந்திரனால் வடங்கள் பூட்டி
வரையாத மின்னொளிவாற் பலகைபாவிப்
பதியொளிவு கூறுல்கீன்கள் கவரிவீசப்
பச்சைக்கற்பூர ஆலாத்தியேந்த
கதிஜா ஆயிஷாயிருவர் வடந்தொட்டாட்ட
காத்திமுல் நபியிருந் தாடுமூஞ்சல் ஆட

4 வயிரம்வயி டூரியத்தாற் கால்கணாட்டி
மாணிக்கத் தாலதின்மேல் விட்டம்போட்டு
உயரொளிவு நீலமணி வடங்கள் பூட்டி
யோசைபெறுஞ் சுவளமணிப் பலகைபாவி
நயனுடைய கூறுல்கீன்கள் கவரிவிச
நறைகமழுங் குங்குமத்தா லாத்தியேந்த
மைமூனு மாறியத்தும் வடந்தொட்டாட்ட
முகம்மதுற்ற சூல்நபினா ராடுமுஞ்சல். ஆட

5 சிதுறத்துல் முந்தஹாவாற் கால்கணாட்டி
ஜென்னத்து பிருதவுசால் விட்டம்போட்டுத்
குதறத்தினாலேசில வடங்கள் பூட்டிக்
குலவுலௌஹு மகுபூலுல் பலகைபாவி
மதுரவாய் கூறுல்கீன்கள் கவரிவீச
வானவர்கள் பன்னீரா லாத்தியேந்த

விதுவதன அபஸாவும் வடங்தொட்டாட்ட
வேதாம்பராலநபி யாடுமூஞ்சல். ஆட

6 லாகூத்தினலே யொளிக்கால்கணட்டி
நயமுள்ளமலக்கூத்தால் விட்டம்போட்டுத்
தீர்க்கமுள்ளஜெபறூத்தால் வடங்கள் பூட்டி
ஜெயவொளிவு ஹலறத்தாற் பலகைபாவி
வாக்கில்சலவாத்துடனே சவுதாஉம்மி
வரிசையுள்ளறகுமாரும் வடங்தொட்டாட்டத்
தீர்க்கமுள்ள ஆலநபி யாடுமூஞ்சல்
தீன்தீன்முகம்மதன ராடுமூஞ்சல். ஆட

7. சந்தனத்தினலிலங்கக் கால்கணட்டித்
தயங்கவொளியகிலதனல் விட்டம்போட்டு
விந்தையுள்ளகுங்குமத்தால் வடங்கள்பூட்டி
விளங்குகின்றகஸ்தூரிப் பலகைபாவிக்
கொந்துலவுகூறுல்கீன்கள் கவரிவீசக்
கூர்மையுள்ள உம்முசல்மா வடங்தொட்டாட்டச்
சுந்தரஞ்சேராலநபி யாடுமூஞ்சல்
சோதிநபிமுகம்மதன ராடுமூஞ்சல். ஆட

8 பொன்னொளிவினலேசில கால்கணட்டிப்
புகழொளிவினலதின்மேல் விட்டம்போட்டு
மின்னொளிவுபோலமுத்து வடங்கள்பூட்டி
மேன்மையுள்ளமரகதத்தாற் பலகைபாவிக்
கன்னியர்கள்கூறுல்கீன்கள் கவரிவீசக்
கதியுறும்உம்முல்மாக்கீன் வடங்தொட்டாட்ட
மன்னர்புகழ்நபியிறசூ லாடுமூஞ்சல்
மக்கநகர்முகம்மதன ராடுமூஞ்சல். ஆட

9 ஆணிப்பொன்னதனலே கால்கணட்டி
யழகுமணிரத்தினத்தால் விட்டம்போட்டு
மாணிக்கமிழைத்தமணி வடங்கள்பூட்டி
வானிலங்குமதியமெனப் பலகைபாவி
சேணட்டுகூறுல்கின்கள் கவரிவீச
செயினபுநாச்சியார் வடங்தொட்டாட்டப்
பூணாரமார்பிறசூ லாடுமுஞ்சல்
புகழ்பெற்றநபியிறசூ லாடுமூஞ்சல். ஆட

10 சித்திரத்தினலேசில கால்கணட்டித்
தெள்ளமுதவின்பத்தால் விட்டம்போட்டு
வெற்றியுடனேம்பொன்னல் வடங்கள்பூட்டி
மேவும்வயிடூரியத்தாற் பலகைபாவி
மதிதனில்கூறுல்கீன்கள் கவரிவீச
மறியம்ஆசியா இருவர் வடங்தொட்டாட்ட

முத்திரைசேராலநபி யாடுமூஞ்சல்
முஸ்தபாமுகம்மதனா ராடுமூஞ்சல். ஆட
11 திக்கீறொளிவாலேசில கால்கணாட்டித்
தீர்க்கமுள்ள தசுபீகால் விட்டம்போட்டுத்
தக்குபீறுதன்னொளிவால் வடங்கள்பூட்டித்
தகையுடனேதகுலீலாற் பலகைபாவிப்
பக்கலிலேகூறுல்கீன்கள் கவரிவீசப்
பண்பபூபக்கருமவர் வடந்தொட்டாட்ட
மக்கநகர்வாழரச ராடுமூஞ்சல்
முகம்மதுர்றசூல்நயினா ராடுமூஞ்சல். ஆட
12 அல்கம்துயென்றதொரு கால்கணாட்டி
வில்லாகியென்றதன்மேல் விட்டம்போட்டு
நல்லதொருறப்பிலென்ற வடங்கள்பூட்டி
நவிலுமொருஆலமீனார் பலகைபாவி
கல்புமகிழ்கூறுல்கீன்கள் கவரிவீசக்
கதியுதுமானாரலியும் வடந்தொட்டாட்டச்
செல்வமுறும்ஆலநபி யாடுமூஞ்சல்
செய்யிதுமுகம்மதனா ராடுமூஞ்சல். ஆட
13 சுல்த்தானியென்றதொரு கால்கணாட்டிச்
சுத்தமுள்ளமலக்கானி விட்டம்போட்டுக்
குல்த்தானியென்றதன்மேல் வடங்கள்பூட்டிக்
குலவுமொளிப்புறுக்கானிப் பலகைபாவி
வலமிடமுங்கூறுல்கீன்கள் கதரிவீச
வள்ளலஸனுசைனும் வடந்தொட்டாட்டக்
குலத்திலுயர்குறைசிநபி யாடுமூஞ்சல்
கோசாமுகம்மதனா ராடுமூஞ்சல். ஆட
14 வல்லவன்றகுமத்தாற் கால்கணாட்டி
வரிசையுள்ள நிகுமத்தால் விட்டம்போட்டு
நல்லதொருஆபியத்தால் தடங்கள்பூட்டி
நலமானகிருபையினாற் பலகைபாவி
வல்லியோர்கூறுல்கீன்கள் கவரிவீச
வான்ஜிபுரீல்மிக்காயீல் வடந்தொட்டாட்டச்
செல்லுலவுகவிகைநபி யாடுமூஞ்சல்
தீன்தீன்முகம்மதனா ராடுமூஞ்சல். ஆட
15 வாசமுள்ளபூமரத்தால் கால்கணாட்டி
வடிவுள்ளவஜ்ரமணி விட்டம்போட்டு
நேசமுடனொளிவுடைய வடங்கள்பூட்டி
நேர்மையுள்ளபொன்னதனாற் பூலகைபாவி
ஏசகன்றகூறுல்கீன்கள் கவரிவீச
இசுறாயீல்இசுறாபீல் வடந்தொட்டாட்டத்

தேசம்புகழ்நபியிறசூ லாடுமூஞ்சல்
தீன்தீன்முகம்மதனு ராடுமுஞ்சல். ஆட

16. காபகபுசைனியாற் கால்கணட்டிக்
கல்பென்றமூட்சமதால் விட்டம்போட்டு
சாபசந்திரசூரியகலை வடங்கள்பூட்டிச்
சங்கைமக்காமன்மகுமுத் பலகைபாவித்
தாபரந்தொண் ணூற்றறுவர் வடந்தொட்டாட்டச்
சங்கையுடனேவரங்கே கவரிவீசச்
சாபல்லியமுகம்மதனு ராடுமூஞ்சல்
தாஜுல்அன்பியாஇருந்தே ஆடுமூஞ்சல். ஆட

17 ஆலமசிசாமதனுற்கால்கணட்டி
ஆலமிதலானதனல் விட்டம்போட்டு
ஆலமறுவாகதனல் வடங்கள்பூட்டி
ஆலமின்சானதனற் பலகைபாவிச்
சாலவுமேமுகியித்தீன் வடந்தொட்டாட்டச்
சங்கையுள்ளகமீதென்னும் சாகிபீன்ற.
சீலமுறும்சிருசித்தீன் மனத்திலுற்ற
செய்யிதுமுகம்மதனு ராடுமூஞ்சல். ஆட

ஊஞ்சற் பாட்டு முற்றிற்று.

இஃது

புதுச்சேரி, ஒ. காதிறு முகியித்தீ னென்பவர் பாடிய

# கும்மிப் பாட்டு

கும்மியடிபெண்ணே கும்மியடி-குபிரோங்கி யோடவே கும்மியடி, நம்மையாளு மிறைவனை நிதமும் நாடிகும்மியடியுங்கடி-தினம்-தேடிகும்மியடியுங்கடி. 1

தானேதானாயிருப்பவனும் என்றும்-தன்னந்தனிமை யுடையவனும், வானமும்பூமியும் போற்றுமிறைவனை வணங்கிக் கும்மியடியுங்கடி-மன-மிணங்கிக் கும்மியடியுங்கடி. 2

ஆலம்படையுனக் காரணமாய்நின்ற-அண்ணல் முகம்மது நன்னபிமேற், சாலவுமாசலவாத்தினையோதிச் சந்திக்க கும்மியடியுங்கடி-மனச்-தொந்திக்கக் கும்மியடியுங்கடி. 3

ஆதியினிலொளிவா யிருந்தேபின்னர்-அப்துல்லா நெற்றியில் வந்துதித்தே, மாதாமினுற்பெற்ற வள்ளலைப்போற்றி மகிழ்ந்து கும்மியடியுங்கடி-மிகப்-புகழ்ந்து கும்மியடியுங்கடி. 4

எல்லாவஸ்தும் படைத்தவனுமென்றும்-ஈரேழுலகையுங் காப்பவனும், அல்லாவென்னும்பேர் கொண்டவன் தூதரை யடுக்கக் கும்மியடியுங்கடி-பவம்-விடுக்கக் கும்மியடியுங்கடி. 5

வானுலகெங்கும் புகழ்ந்தேற்றுமக்க-மாநகர்தன்னி லவதரித்த, தேனவிழ்மாலை முகம்மதுறசூலைத் தெரிந்து கும்மியடியுங்கடி-மனம்-புரிந்து கும்மி யடியுங்கடி. 6

அரம்பைகளோடாசியா மறியமிவ்-வவனியின் மருத்துவம் புகுதக், கருணையுலவப்பிறந்த முகம்மதைக் கருதிக் கும்மியடியுங்கடி-குழல்-சொருகிக் கும்மியடியுங்கடி. 7

ஞானமுந்தானமும் நல்லறிவுமிக்க-நாணமுமானமு முள்ளவராம், வானவர்போற்று முகம்மதுரசூலை வாழ்த்திக் கும்மியடியுங்கடி-கரங்-தாழ்த்திக் கும்மியடியுங்கடி. 8

சுற்றிலுங்காத வழியிலரசுறுஞ்-சுடிகைமன்னர்க ளீரற்துலை, முற்றும்நடுங்க நபிபட்டம்பெற்றோரை முடுகக் கும்மியடியுங்கடி-மிகக்-கடுகக் கும்மியடியுங்கடி. 9

மஆசீன்புதல்வனு ரிருவருஞ்செத்து-மரித்திடுஞ் செய்தி யறிந்தவுடன், துஆச்செய்தெழுப்பிய தூதரைப் போற்றித் துதித்துக் கும்மியடியுங்கடி-மிக மதித்துக் கும்மியடியுங்கடி. 10

வஞ்சனைத்தொழில்கள் வானுலகிற்செல்ல-மாட்டாதென் றெண்ணியே வாக்களித்தார், நெஞ்சம்புழுங்க நிலவைப் பிளந்தோரை நினைந்து கும்மியடியுங்கடி-துகில்-புனைந்து கும்மியடியுங்கடி. 11

ஓதுங்கியாமத்தில் மானிடர்கள்மிக-வொடுங்கியலையும் போதினில், லாதரஞ்சொல்லி மன்றாடும் நபிபுகழறிந்து கும்மியடியுங்கடி-மலர்-சொரிந்து கும்மியடியுங்கடி. 12

ஆசிங்குலத்தி லுதித்தவராம்பனி-ஆதம்மரபினிலுள்ளவராம், வாசனைவீசு மெய்த்தூதரின் தீன்மிக வலுக்கக் கும்மியடியுங்கடி-நிதஞ்-சொலிக்கக் கும்மியடியுங்கடி. 13

சல்மான் பரிசுக் காண்டினிலீந்து-தளிர்ந்துக் காதணி நாடளித்த, செல்லார்கவிகை மாதவர் தீன்மிகச் செழிக்கக் கும்மியடியுங்கடி-பாவம் ஒழிக்கக் கும்மியடியுங்கடி. 14

திமிசுக்கிறையவ னீன்ற தசையினைச்-சீர்பெறப் பெண்ணுருவாக்கிவைத்த, அமரர் புகழும் அருமதைப் போற்றி அன்பாய்க் கும்மியடியுங்கடி-மிகு-தென்பாய்க் கும்மியடியுங்கடி. 15

காட்டினில்வாழும் பிணைக்குப் பிணைநின்று-காரணமனந்தங் காட்டிமறையேட்டிடடங்கா வின்றயவன் றூதரை யிசைந்து கும்மியடியுங்கடி-மெள்ள-அசைந்து கும்மியடியுங்கடி. 16

பொல்லாச்சூதனிபுலீசுந் தினம்-புலம்பித்திரியப்பூதலத்தின்,
மல்லாடுங் காபிரை வென்றமுகம்மது வாழ்த்திக்கும்மியடியுங்கடி-
கரங் தாழ்த்திக் கும்மியடியுங்கடி, 17

வாடைகஸ்தூரி வழிகாட்டவந்த வள்ளல்-முகம்மதர் வாக்
கியத்தின், சாடைக்குளம் பொருந்தாதவர் தங்களைச் சாடி கும்மி
யடியுங்கடி-தமிழ்-பாடி கும்மியடியுங்கடி. 18

வானுலகிற் சென்றிறையுடனேயிக்க-வார்த்தைகளாடி வள்
ளல்தந்த, தீனையிகழ்ந்து நடக்கின்றதீமை யார்தெளியக் கும்மியடி
யுங்கடி-இடை-நெளியக் கும்மியடியுங்கடி. 19

வாக்கும் மனமும் பொருந்தச்சொல்லும் கலிமாவின்
பொருளை மனதில்வையா, மாக்களை யேகன் வதைப்பனென் றெண்
ணியே வருந்திக் கும்மியடியுங்கடி-யுண-வருந்திக் கும்மியடியுங்
கடி. 20

நாளொன்றுக் கைந்துவிசை வணங்காரந்த-நாளில் நரகந்தனி
லிருந்தே, தேளொன்று கொட்டித்திகைப்பரென்றேமனந் தேம்
பக் கும்மியடியுங்கடி-முகங்-கூம்பக் கும்மியடியுங்கடி. 21

சரகின்தங் கடமின்றி நன்னோன்பைச்-சட்டை செய்யாமலே
விட்டுவிட்டோர், நரகினிற்பசித் தலைவரென்றே நவின்று கும்மி
யடியுங்கடி-மனம்-புகன்று கும்மியடியுங்கடி. 22

கள்ளு சாராயந்தனைக் குடித்துக்-கடைக்-கஞ்சா யபினை
மிகப் புசித்தே, துள்ளிவிழுந்தலைந்தே நடக்கின்றவர் சுருங்கக்
கும்மி யடியுங்கடி-எரி-நெருங்கக் கும்மியடியுங்கடி. 23

சூதுசதுரங்கந் தன்னுடனே தினஞ்-சொக்கட்டானுடுந் துடுக்க
ரெல்லாம், வாதிற்பொருளறிந் தோய்ந்த பின் றீயினில்வரளக்
கும்மியடியுங்கடி-விழி-புரளக் கும்மியடியுங்கடி. 24

கொண்டமனைவியை விட்டொருவன்கண்ட-கோதையின்மீதி
னிற்காதலுற்ற, மிண்டர்கள் தீயில்விழுந் தழிவாரென்றே வினவிக்
கும்மியடியுங்கடி-தீனைச்-சினவிக் கும்மியடியுங்கடி. 25

இந்தக்கும்மியைப் படித்தோர்க்கும் மிக-இலங்க அச்சிற்
பதித் தோர்க்கும், முந்துமிறையவன் றருமத்துண்டென்றே
வாழ்த்திக் கும்மியடியுங்கடி-வாழ்க-ஏத்திக்கும்மியடியுங்கடி 26

கும்மிப் பாட்டு முற்றிற்று.

---

114113

இஃது

# முன்னோர்கள்பாடிய

# தாலாட்டு

——[]——

## காப்பு-வெண்பா

பாருலகில்வண்ணப்பரிமளம் வீசும்மிறசூல்
சீருலகிற்றாலாட்டைச் செப்புதற்கு-நேருடனே
பார்த்தாலுமென்சொற் பழுதுவாராதபடி
காத்தருள்வாய் நீயாதிகாப்பு.

## கண்ணிகள்

சீர்கொண்ட ஆலமெல்லாஞ் சிறந்தஇசுலாந்தழைக்க
நேர்கொண்ட தீனை நெறிகொண்டுவந்தவரே. 1

முன்னேயொளிவாகி முதலோன்றிருத்தூதாய்ப்
பின்னேநபியாய்ப் பிறந்தமுகம்மதுவே. 2

அண்ணலப்துல்லா அருமைமகவாக
பெண்ணினழகாமினார் பெற்றெடுத்தபாலகரே. 3

அலிமாமுலையருந்திய வரத்திலேவளர்ந்து
புலிமானொருதுறைநீர் உண்ணவந்தபுண்ணியரே. 4

திக்குத்திகாந்தமொடும் தேய்ந்தனக்குயர்ந்த
மக்கம்பிறந்து மதீனம்ஆளவந்தவரே. 5

மட்டுலவுஞ்சொர்க்கம் வாழ்மடவார்தாலாட்டத்
தொட்டிலிற்றுயில்கொள்ளும் துய்யமுகம்மதுவே. 6

மாணிக்கத்தொட்டிலதை மடவார்பிடித்தாட்டப்
பூணிக்கையாய்க்கண்வளரும் புண்ணியராய்வந்தவரே. 7

பார்க்கக்கனலெரியும் பாலைக்கடுஞ்சுரத்தில்
ஆர்க்குநன்னீரளிக்கும் அண்ணல்முகம்மதரே. 8

பாரமலைபோல்நாகம் பதியிற்படம்விரித்தே
நேரில்லாதிருக்கக்சுண்டு நீள்துரும்பால்வதைத்தோரே 9

கானகத்திலாறுதனைக் கடுகவரவழைத்தே
யீனமில்லாநீரளிக்கு மெங்கண்முகம்மதுவே. 10

புதியகிணறுப்புநீர் பொங்கினும்பதங்கனவ
னதியழைத்துக்காட்டவந்த நன்மைமுகம்மதுவே. 11

எங்கணயினரே யெல்லவர்க்குந்தாயகமே
அங்கங்கஸ்தூரிவீசு மழகார்முகம்மதுவே. 12

ஆதிபடைத்த அப்துகளடங்கலுக்கும்
நீதிமணிப்பேரொளியாய் நின்றமுகம்மதுவே. 13

முத்திலுதித்தவரே மூமின்கள்கைப்பொருளே
நித்தனருள்வேதப்படி நெறிநடத்துங்கோமானே. 14

மஞ்சுகுடைநிழற்ற மக்காவின்வீதியெல்லாம்
கொஞ்சிவிளையாடுமெங்கள் கோமான்முகம்மதுவே. 15

விண்ணினரசே சதுர்வேதமுகம்மதுவே
கண்ணின்மணியேயெங்கள் காரணரேகண்வளரீர். 16

தேசப்பொருளே தெவிட்டாச்செழும்பாகே
வாசத்திருமேனி வள்ளல்முகம்மதுவே. 17

உற்றஅபூபக்கர்க்கும் உண்மையுமர்தமக்கும்
மற்றுநிகரில்லா தமருகரெனவந்தவரே. 18

செய்யுமுதுமானார்க்கு சிறந்தபுலி அலிக்கும்
வையம்புகழ்மாதுலராய் வந்தமுகம்மதுவே. 19

சீராரிமாமசனார் சிறந்த இமாமுசைனார்
பேரார்தும்பேரரெனப் பேறுகொள்ளவந்தவரே. 20

நண்ணசகாபிமார்கள் நாற்பத்திராயிரர்க்கும்
கண்ணினொளிபோலே கலந்திருந்தகாரணரே. 21

திக்குகளில்தீனிசுலாஞ்சேர்ந்த உம்மத்தோர்களையே
தற்காத்தேயாளும் சபா அத்துக்குடையவரே. 22

பங்கயப்பொற்றுள் பீவிபாத்திமாநாச்சியெனும்
மங்கையர்க்குத்தந்தையென வந்தமுகம்மதுவே. 23

அண்டர்புகழ்கதிஜா அங்கணவரென்றுலகோர்
கொண்டுபுகழ்வந்த கோமான்முகம்மதுவே. 24

எண்டிசையும்பாரு மேகாப்பெரும்பதியும்
அண்டருலகெல்லாம் அரசாளவந்தவரே. 25

சூடேறுந்தீயதனுட் சுழன்றெரியும்பாவிகளை
ஈடேற்றிக்காக்கவந்த வெங்கண்முகம்முதுவே. 26

மீனோடும்பேசிமிடியருக்கு வாழ்வுநல்கி
மானோடும்பேசுமெங்கள் வள்ளல்முகம்மதுவே. 27

வேம்பானகாபிரும்மை வெட்டவரும்வழியிற்
பாம்படையும்பொதும்பிற் பள்ளிகொள்ளவந்தவரே. 28

நல்லநெறியீமானு நானிலத்திலேதழைக்க
கல்லுங்காய்ப்பிடித்துவிடக் காட்டிவந்தகாரணரே. 29

தீமைதனைப்பேசுகின்ற செயலைக்கருவறுத்தே
ஊமைதனைப்பேசவைக்கு முண்மைமுகம்மதுவே. 30

அறபுத்திருநாட்டில் அடங்கலுமீமான்றழைக்க
குறைஷிப்பெருங்குலத்திற் கோமானாய்வந்தவரே. 31

ஈமான்றழைக்க இசுலாம்பெருத்தோங்க
மாமானங்காக்கவந்த மன்னர்முகம்மதுவே. 32

நாயுமுடும்புமுசல் நவிலுநாற்கால்மிருகம்
பேயுநுந்தமோடெதிராய்ப் பேசவைக்குங்காரணரே. 33

கல்லேவணங்குங் காபிர்களேயயறுத்து
நல்லநெறியீமானே நாடேற்றவந்தவரே. 34

விரிந்தகுபிர்காட்டை வெட்டிவழியாக்கிப்
பரிந்தபுகழீமானேப் பயிரேற்றவந்தவரே. 35

செய்தவமெல்லாம்போற்றத் தீன்பயிரைத்தானேற்றிக்
கைவிலானீரழைக்கும் கபீபுமுகம்மதுவே. 36

கொந்தலமேயரசே கோசாலமானவரே
சந்தாபமில்லாத சாதிக்குலநாயகமே. 37

குங்குமப்பூமாலேயணி கொற்றவர்களுக்கரசே
அங்கத்தொளிவீசு மண்ணல்முகம்மதுவே. 38

ஆராருங்காணவொண்ணு தங்கிரத்தின்மேலேபோய்ப்
பேரார்பெரியவன்முன் பேசவேவந்தவரே. 39

வேதமோநாவில் விளேவானவுத்தமரே
பாதமணிதண்டாப் பயகாம்பர்கண்வளரீர். 40

பிடரிலணியாகப் பிறைபோலிலாஞ்சனேயும்
படையேறிவென்றுவரும் பார்த்திபரேகண்வளரீர் 41

ஏகன்சமுகமதி லெக்கீனெனுமரத்தில்
தோகைமயில்வடிவாய்த் தோன்றிவந்தநன்னபியே. 42

முன்காணுந்தூரமட்டு முழுதுமதுபோலப்
பின்காணும்வள்ளலே பெருமையாய்க்கண்வளரீர். 43

வள்ளல்முகம்மதுபோல் வாழ்த்துகின்றதாலாட்டைப்
பிள்ளேயின்பிரியம்போற் படிப்போர்களும்வாழி. 44

மூமீன்முகம்மதும் முத்தின்மொழிதாலாட்டைப்
பூமீதிலெங்காளும் போற்றுவோர்வாழியவே. 45

பூமியின்மும்மாரிமழை பொழிங்தெவர்களும்வாழி
ஆமீனல்லா ஆமீன்யாறப்பில ஆலமீனே. 46

தாலாட்டு முற்றிற்று.

---

## விருத்தம்

அண்டர்கோன்புக ழண்ணல் முகம்மதின் ஆரணத்தை யறிந்துலகத்தினிற், கொண்டுநாளுங் குலவி நடந்திடாக் கொடியர்பாழ் நரகுக் கிரையாயவரேற், பண்டு நன்னபி மார்களுவப்புறும் பாக்கிய மார்க்கம் படியாமல் செய்தவர், கண்டுமென்மொழிக் கன்னியர் வாழ்ந்திடுங் கனக நாட்டைக் கையாளுவார் நாளுமே.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

இஃது

முன்னோர்கள் பாடிய

# தோழிப்பெண் பாட்டு

காப்பு—வெண்பா

தோழிப்பெண்பாட்டைத் தொகுப்பாயுரைப்பதற்கு
ஆழிசூழெவ்வுலகு மமைத்தோனே—வாழியுமும்
அல்லாவேயென்றனக் கன்பருணையேநிதமும்
வல்லானே யீந்தருளுவாய்.

கண்ணிகள்

அரியவனேபெரியவனே ஆயிரம்பேருடையவனே
உரியவனேருடையவனே யுலகமெல்லாம்படைத்தவனே. 1

உலகமெல்லாம் படைத்தவனே யுண்மையுள்ளமெய்ப்பொருளே
பலமலையும்அலைகடலும் படைத்தழிக்குங்காரணனே. 2

காரணனேயாரணனே கருத்தறியுங்கோமானே
பூரணனேநீரலைசூழ் பூலோகமுடையவனே. 3

பூவுலகம்வானுலகம் போற்றிசெய்யும் புண்ணியனே
மூவுலகங்கொண்டாட முக்கியமாய்ப் பாடுகிறேன். 4

தோழிப்பாட்டுப்பாடுகிறேன் சோதியுள்ளமன்னவனே
வாழியருள்தந்தேநீ வண்மையாய்க்காத்தருள்வாய் 5

காத்தருள்வாய்காத்தருள்வாய் கர்த்தாவேகாத்தருள்வாய்
பார்த்தருள்வாய்கிருபையினாற் படைத்தவனேயுன்னருளால். 6

மதித்தபெரும்புதுமையைக்கேள் மக்கமெனுமோர்பதியாம்
கதித்தபுகழ் அவ்வூரில் கருபத்துல்லாப்பள்ளிபெண்ணே. 7

கருபத்துல்லாப்பள்ளியினுட் காரணங்களும்மிகுதி
ஆபத்தெல்லாம்நீங்கிவிடு மன்னமமேதோழிப்பெண்ணே. 8

நன்னிலமாம்பொன்னிலத்தில் நபிவாழுநல்விடமாம
பொன்னிலமுமொவ்வாதாம் பூமிக்கெல்லாம்பொதுத்தலமாம், 9

பூமிக்கெல்லாம்பொதுத்தலமாம் பொழுதுநிலாவிலகிடுமாம்
சேமமுள்ளவரிசைபலசேர்ந்த தலந்தோழிப்பெண்ணே 10

பதியடுக்கநாடுபவர் பாவமெல்லாந்தீர்ந்திடுமே
நதியழைத்தநபியிறசூல் நாடுந்தவந்தோழிப்பெண்ணே. 11

நன்மதிசேர்மக்கமதில் நபியிறசூல்பிறந்ததலம்
பொன்மதில்சூழ்கோட்டையுடன் பூங்கமுகுச்சோலைகளும். 12

பூங்காவனங்களினுள் பூமணங்கள்வீசிடுமாம்
ஆங்கானவூரில்அறபாத்து மலைதோழிப்பெண்ணே. 13

அறபாத்துமலையிடத்தில் அச்சுசெய்யநன்மையுண்டாம்
நிறைவேற்றுங்கருமமெல்லாம் நேராகுந்தோழிப்பெண்ணே. 14

நேராகவானோர்கள்நித்தம் வந்திறங்குந்தலம்
பாரோர்புகழுகின்றபள்ளி யுண்டுந்தோழிப்பெண்ணே. 15

பள்ளிக்கெதிராகப் பத்துக்கொடிபறக்கும்
வெள்ளிப்போல்மனூருவிளங்கிடுமேதோழிப்பெண்ணே. 16

மெத்தப்பயத்துடனேமேலோன் வணக்கஞ்செய்வார்
குத்துபாஅன்றுகுறுஆன முழங்குந்தோழிப்பெண்ணே. 17

அந்தமுள்ளகினூறுநபி யழகாகவந்ததங்கண்
புந்தியுறப்பெரியோனைப் புகழுவார்தோழிப்பெண்ணே. 18

அவரவர்கள்வந்தங் கலங்காரமாயிருந்தே
திவழுகின்றபள்ளியினுள் தீன்கலிமாமுழக்கிடுவார். 19

தீனிறசூல்தானிருந்த திருமனையுமவ்விடமே
வானொளிவுமவரொளியில் மறைந்துவெளிதோன்றிடுமே. 20

தோன்றும்நபிநாயகத்தைச் சூழ்ந்துமிருப்பவர்காண்
என்றுசொல்லும்பெருமைதன்னை எண்ணத்தொலையாதே. 21

எண்ணத்தொலையாதே யிறசூல்தம்மெய்யொளிவு
கண்ணுக்கடங்காதே கல்புகுளிர்ந்திடுமே. 22

கல்புகுளிர்ந்தேநிதமுங் கருமமெல்லாந் தீர்ந்திடுமே
செல்வம்பெருகிடுமே சென்னத்துமுண்டாகிடுமே. 23

பண்ணமைந்தபீபிபாத் திமாநாயகத்தின்
தண்ணமைந்தபாபாவின் சபாஅத்துமுண்டாமே, 24

சீராசனுசைனர் செல்வரிருவருந்தான்
வீரார்முடிதரித்த வெற்றியுள்ளோர்தோழியரே. 25

ஓரடுக்காந்தோழிப்பெண்ணே ஓதுங்கலிமாவை
ஈரடுக்காந்தோழிப்பெண்கள் எண்ணித்தொழுதிடுங்கள். 26

மூவடுக்காம்சக்காத்தீங்கள் முத்தானகையாலே
[illegible]லடுக்காந்தீநரகம் நம்மளவில்நாடாதே. 27

நாலடுக்காந்தோழிப்பெண்காள் நன்றிதரும்நோன்புதனை
மாலடுக்கவேபிடிப்பீர்வாழ்வு வருந்தோழிப்பெண்காள். 28

அஞ்ச்டுக்காந்தோழிப்பெண்காள் அச்சுதனைச்செய்திடுவீர்
நஞ்சடைந்ததீநரக நம்மளவில்நாடாதே. 29

ஆறடுக்காந்தோழிப்பெண்காள் அல்லாவொருவனென்றும்
மாறடுக்காதேபுகழவாழ்வு வருந்தோழிப்பெண்காள் 30

ஏழடுக்காந்தோழிப்பெண்காள் ஏகன்மலக்குகளாய்
தாழடுக்காதவர்களென்று தானறிவீர்தோழிப்பெண்காள் 31

எட்டடுக்காந்தோழிப்பெண்காள் இறங்கியநால்வேதமுடன்
மட்டுமொழியாம்சுகுபும்வல்லோன் மொழிதோழிப்பெண்காள்.

ஒன்பதுவாம்நம்பிறசூல் உள்ளநபிமார்களெல்லாம்
அன்போடிறைதூதரென் றறிந்திடுவீர்தோழிப்பெண்காள். 33

பத்தடுக்காகின்றதுதான் பலவுயிரெல்லாமெழுப்பி
கத்தனன்மைதீமைகளைக் கேட்கிறதாந்தோழிப்பெண்காள். 34

ஆகப்பதினோர்காரியமும் ஆகுமேயவனிடத்தில்
ஈாயனொருவன்றானே நன்மைக்குப்பயமில்லாமல். 35

ஓதரியதீமைதனக் கையமில்லைதோழிப்பெண்காள்
நீதியுடனிந்தபடிநீங்கள் அறிந்துகொள்வீர். 36

உண்மையுள ஆதநபியுவந்த பஜிர்த்தொழுகை
வண்மையுடனேதொழுக வருவீர்கள்தோழிப்பெண்காள். 37

வேதஇபுறுகீம்நபிவேண்டும் லுகறுத்தொழுகை
மாதர்களேநின்றுதொழ வாருங்கள்தோழிப்பெண்காள். 38

வெற்றியூனுசுநபிவிளங்கும் அசறுத்தொழுகை
பற்றியதையேதொழுக வாருங்கள்தோழிப்பெண்காள். 39

தானவராமூசாநபிதம் மகரிபுத்தொழுகை
மானமுடனேதொழுக வாருங்கள்தோழிப்பெண்காள். 40

ஈசாநபிதொழுதாரினிய இஷாத்தொழுகை
கூசாமலேதொழுகக்கூடிவாரும் தோழிப்பெண்காள். 41

இசாவதனில்நம்மிறசூல் இறைஞ்சும்வித்துறுத்தொழுகை
ஆசாரமாய்த்தொழுகஅங்ஙன் வாருந்தோழிப்பெண்காள். 42

அன்னமேதோகையரே அழகாகும்பெண்குயிலே
சொன்னமேபைங்கிளியே தொழுதிடுவோம் நன்றாக. 43

அல்லாவின்தூதுவரை ஆலநபியானவரை
வல்லாண்மைகொண்ட முகம்மதுர்றசூல்நபியை. 44

கிட்டாதநன்னபியைக் கீர்த்திபெருங்கடலைக்
கட்டாணிமுத்தொளிவை கபீபிறசூலானவரை. 45

சிந்தாமணியான தீன்விளக்கவந்தவரைக்
கொந்தாலமானவரை கோஜாலமானவரை. 46

சந்தாபமில்லாத சாதிக்குலநாயகத்தை
முந்திவுதித்தவரை மூமீன்கள்கைப்பொருளை 47

முத்தாயுதித்திருந்த முகம்மதுர்றசூல்நபியை
நித்தம்புகழ்ந்திடுவீர் நேசமுள்ளதோழிப்பெண்காள். 48

சுத்தமுள்ளவிறசூல் சுந்தரமாய்ப்பெற்றெடுத்த
பத்தினிபாத்திமத்தின்பலன் ஷாபாஅத்தும்பெறுவீர். 49

ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்
தோழிப்பெண் பாட்டு முற்றுப்பெற்றது

---

இஃது-இராமநாதபுரம் இரவுண் ஷாப்புக்கடை
ப. வெ. முகம்மது இபுறுகீம் சாகிபு முயற்சியால்
குலசேகரப்பட்டணம் சர்க்கரை சாகிபுத் தம்பியவர்கள் குமாரர்
அல்லாபிச்சை புலவரவர்களால்
இலக்கணவிலக்கிய வழுவறத்திருத்தியபடி அச்சிடப்பட்டது.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

இஃது

காயற்பட்டணம்

கண்ணகுமது மகுதூப்பிள்ளை யவர்கள் குமாரர்

மகுதூ முகம்மதுப் புலவரவர்கள் பாடியபாடல்

# ஹக்கு பேரிற் புகழ்ப்பத்து

## முதல் - வெண்பா

காக்கும் பெருங்கருணைக் கத்தனே நித்தமனம்
பூக்குந்திருக்கருணைப் பூமானே—நோக்குநர்க
ளேக்கமெலா நீயதனால் * நூற்றலேன் சிற்றடிமை
வாக்கிருந்து நல்லருள் செய்வாய்.

## அறுசீர்க்கழிலடி யாசிரிய விருத்தம்

கணிக்குங் கணிதத்தடங்காத கருணைக்கடலே கற்பகமே,
பிணிக்கும் வறுமைதனிலடிமை பேதத்துழலா தெவ்வினையுந்,
தணிக்குமருந்தே சஞ்சீவித் தருவே தாஹாநபிபொருட்டா,
லணிக்கண் கிருபைசெய்தருள்வா யகதேயாதிறகுமானே. 1

ஏண்ணங்களை யொருகோடி யெடுத்தே மனது வாட்டமிக,
நண்ணுமடியேன் றுயரகற்றி நவிலுமுனது கிருபைமழைத், தண்
ணம்பொழியச் செய்தருள்வாய் தனியே முதலே தற்பரனே,
விண்ணம்பரமும் படைத்தளிக்கும் வேதப்பொருளே றகுமானே.

கூவித்துயர முரைத்துடலங் குலுங்கவிருகண்ணீரடியிற்,
பாவிப்பெருக வழுதடிமை பல்காலிரக்கு மிரப்புமொழி, நாவிட்
டிரையா திருந்தகத்தி னுடியிரக்கு மிரப்புமறி, கோவிற்பன்னீ
யாகையினுற் குறைகடீர்ப்பாய் றகுமானே. 3

திருத்தும்பொருளே புகழ்க்குரிய தேவேபாவே தெள்ள
முதே, வருத்தமிகவே புரிந்துடலை வாட்டும் வறுமைதனிலடிமை,
கருத்துமனமுங் கலங்காமற் காக்குமுனது கருணைமழை, யருத்
தம்பொழிவா யெவ்வுலகு மரசாளரிய றகுமானே. 4

---

* நூற்றல்-சொல்லல்; இதுமயக்கம்; இராமாயணம் அவையடக்கத்திற் காண்க.

7ம.
6-68.
87:417
N46



ஈரற்கொழுந்தே குலக்கொழுந்தே யிறைவர்க்கிறையே
யுயிர்ப்பிணத்தின், பாரத்திறமையறிந்த வைக்கோர்ப்பன லூனி
ரணங்கொடுப்பவனே, நேரத்தியலெல்லாந் தெரிவை நீயாதலினு
லடிமைதுயர், தீரக்கிருபைக் கடலமுதந் தெவிட்டத் தருவாய்
றகுமானே 5

முத்திப்பொருளே தவப்பொருளே மோனப்பொருளே நல்
லடியார், பத்திப்பொருளே பவமறுக்கும் பாரப்பொருளே பாக
கியமார், சித்திப்பொருளே யெம்மனதுந் தெரியும்பொருளே
யேழைகலி, கொத்திப்பிளந்து க்ஷேமப்பொருள் கொடுப்பாய்
துய்யறகுமானே. 6

தெரிந்துந்தெரியாதடியர்கள் செய்யும்பிழைகடீரநின்பாற்
பொருந்தியிரங்கிக்கேட்கிலுடன் பொறுத்துக்கிருபையளிப்பனெ
திருந்தவறுதிரீயுரைத்ததிறனுலெளியேன்பவமகற்றிப் [னத்
பரிந்தகருணைபுரிவாயெப் படைப்பும்படைத்தறகுமானே. 7

நந்தாவொளியேபேரொளியே நபிநாயகத்தையெங்களுக்குத்
தந்தாதரித்தேயறிவாலுன் றனையுமெனையுமறிந்துய்யக்
கொந்தார்குறுஆனைக்கொடுத்த குருவேமருவேசிற்றடியன்
சிந்தாகுலங்களகற்றியருள் செய்வாய்மெய்மைறகுமானே. 8

ஏத்தியிரங்கித்தவுபாச்செய் திரவும்பகலுஞ்சிற்றடிமை
பாத்திஹாவுமிகுலாசும் படித்துப்படித்தேயிரக்குமுனு
ஜாத்திற்கிரங்கிவறுமைபிணி சாராதகற்றியருளளித்துக்
காத்துக்கிருபைசெய்பவேண்டும் கருணுகரனேறகுமானே. 9

அல்லும்பகலுநித்திரையு மதுவேதொழிலாய் நின்னுமஞ்
சொல்லுமகுதூமுகம்மதென்போன் றுதித்துப்புகழுமுனுஜாத்தைத்
வெல்லுங்கருமமதற்காக விரும்பிப்படித்தோர் கேட்டிருந்தோ
ரல்லலகற்றிநல்வரிசை யருள்வாயருள்வாய்றகுமானே. 10

ஹக்குபேரிற் புகழ்ப்பத்து முற்றிற்று.

---

114113

Q. H. M. S. 320. காபி 2000. (16-10-46)
ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், ஜி. டி. மதராஸ்.